# **அவருடன்** எப்போதும் இணைந்து இருங்கள்

கம்லேஷ் டி. படேல்

ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்திற்குப் பின் ஆற்றிய உரை

29 மார்ச், 2015, சென்னை, இந்தியா

நமஸ்தே,

ஒவ்வொரு வருடமும், பூஜ்ய லாலாஜி மகராஜ், பாபூஜி மகராஜ் மற்றும் நமது மாஸ்டர் ஆகிய மூவரது பிறந்தநாள் விழாக்களையும் கொண்டாட நமது அன்பிற்குரிய மாஸ்டர் அனுமதி அளித்திருக்கிறார். இவ்வனைத்து விழாக்களையும் கொண்டாட நாம் இதயபூர்வமாகத் தயாராக இருக்கிறோம். ஆனால் பற்பல வெளிக்காரணங்களால், அது முடியாமல் போகக்கூடும். பிறந்தநாள் விழா சத்சங்கங்களிலும், இத்தகைய விழாக்களிலும் கலந்துகொள்ள முடியாததற்காக ஒருவர் குற்ற உணர்வு கொள்ளக்கூடாது. உங்களால் முடிந்தால் அதை உங்கள் இல்லத்தில் கொண்டாடுங்கள். உங்களால் அவற்றிற்குச் செல்ல இயலாவிடில் மனச் சோர்வு அடையாதீர்கள். உங்கள் இதயம் சரியான இடத்தில்தான் இருக்கிறது. உங்கள் மனைவி அல்லது உங்கள் பெற்றோர்கள் அனுமதிக்காததாலோ, பணவசதி இல்லாததாலோ அல்லது உங்களது வேலையின் காரணமாகவோ, காரணம் எதுவாயினும், உங்கள் இதயத்தை வருத்திக் கொள்ளாதீர்கள். தயவுசெய்து உங்களை பலவந்தப்படுத்திக் கொள்ளாதீர்கள், அனைத்து பண்டாராக்களிலும் கலந்துகொள்வது என்பது அனைவராலும் இயலாது.

நாம் எங்கிருந்தாலும், மாஸ்டரை நம்மால் அழைக்கமுடியும். “என் அன்பிற்குரிய மாஸ்டர் அவர்களே, தயை புரியுங்கள், எனது சூழ்நிலைகள் எந்த அளவிற்கு மோசமாக இருக்கின்றன என்பதை நான் சொல்ல விரும்பவில்லை, இங்கேயே, இப்போதே அதை நாம் கொண்டாடுவோம்” என மனமுருகி நம் இதய உணர்வுகளை அவர் முன் சமர்ப்பித்து வேண்டினால், அங்கு மாஸ்டர்கள் நிச்சயம் தங்கள் முழு சக்தியுடன் இருப்பார்கள். எனவே, எந்த பிறந்தநாள் விழாவாயினும், அங்கு அவருடன் தொடர்பிலிருக்க நாம் நமது இதயங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் இது நாம் அடைய விரும்பும் ஒரு சிறிய லட்சியமே ஆகும். இது மிகச் சிறியதொரு அவா ஆகும். எந்நேரமும் நம் மாஸ்டர்களுடன் நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்வதே நமது லட்சியமாக இருக்கவேண்டும். காலையில் நாம் தியானம் செய்து, பின்னர் தியான நிலைக்குள் சென்று - அதை நாம் தியான நிலை என்கிறோம் - அதே நிலையில் நாள் முழுவதும் இருப்பதைப் போன்றது இது. பண்டாராக்கள் வருடத்தில் மூன்று முறை நடைபெறக்கூடும், ஆனால் அந்தக் கொண்டாட்டம் எப்போதும் தொடரவேண்டும். அதாவது, மாஸ்டர்கள், தாங்கள் விரும்பும் விதத்தில் நம் வாழ்க்கையை வழிநடத்திச் செல்வதற்காக, நாம் எப்போதும் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். நமது வாழ்க்கை மலர, மலர நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

சகஜ மார்க்கம் ஒரு சிறப்பான அம்சத்தைக் கொண்டுள்ளது - நாம் இறந்தபின் ஒளியுலகத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை. அது பௌதீக உலகமல்ல, அது ஒரு பரிமாணம்தான். அதை நம் இதயங்களுக்குள்ளேயே நம்மால் உருவாக்கிக் கொள்ளமுடியும் மற்றும் நம் இதயங்களில் அதை உணரவும் முடியும். உள்நிலையானது, இவ்வுலகிற்கும், அவ்வுலகிற்கும் எந்த வித்தியாசமும் தெரியாத வகையில் இருக்கவேண்டும். பாபூஜியின் சுயசரிதையில் ஒரு பத்தி என் நினைவிற்கு வருகிறது. அதில், லாலாஜிஅவர்கள் பாபூஜியிடம், “நான் உங்களுக்காக ஒளி உலகை விட்டுவிட்டேன் உங்களது இதயம் எனது இருப்பிடம் ஆகிவிட்டது. ஆகையால் நான் ஒளி உலகிற்குத் திரும்பிச் செல்லமாட்டேன்” என்று கூறுகிறார். பாபூஜி தன் இதயத்தில் எத்தகைய உயர்தன்மையை உருவாக்கிக் கொண்டிருக்கவேண்டும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். மேலும் அவர், இந்த இதயம் இங்கேயே இப்போதே ஒளிஉலகமாக ஆகக்கூடிய ஒரு நிலையை நம் அனைவராலும் உருவாக்கமுடியும் என்று வாக்குறுதி அளிப்பதுடன், அதை உறுதியாகவும் நம்புகிறார். பின்னர் ஒவ்வொரு நாளும் ஒரு கொண்டாட்டம்தான்.

நான் உங்கள் அனைவரையும் அவ்விதத்தில் தயாராகும்படி வேண்டுகிறேன். நான் மீண்டும், மீண்டும் சொல்வதுபோல், மாஸ்டரின் உதவி எப்போதும் இருக்கிறது. “மாஸ்டர், என்னை ஆசீர்வதியுங்கள், எனக்கு இதை அல்லது அதை அளித்து ஆசீர்வதியுங்கள்” என்று எப்போதும் நாம் எதையாவது அவரிடம் வேண்டிக் கொண்டேயிருக்கிறோம். அருவருப்பூட்டும் அத்தகைய வேண்டுகோள்களை நிறுத்துங்கள். .அதைவிட, எதை அடைந்தால் வாழ்க்கையில் நமக்கு வேறு எதுவும் தேவைப்படாதோ அந்த மேலான ஒன்றைக் கேளுங்கள்.

பண்டாராக்களைப் பற்றிப் பேசுகையில், நாம் இப்போது லக்னௌவில், பாபூஜி மகராஜின் பிறந்த நாளைக் கொண்டாட இருக்கிறோம். இதுவரை பல வருடங்களாக, பண்டாராக்களின்போது மக்கள் பல்வேறு விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்திருந்ததை நாம் கவனித்திருக்கிறோம். சிலர், தங்கள் தொழில் சம்பந்தமான. முடிவுகள் எடுக்கவும், ஒரு சிலர் திருமணங்களை நிச்சயிக்கவும் அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். மற்றும் சிலர், மாஸ்டரது குடில் முன் – அந்த ஒரு இடத்தில்தான் அருளையும் பிராணாஹுதியையும் பெறமுடியும் என்பதுபோல் கூட்டம் கூடிக் கொண்டிருந்தனர், “நான் குடிலுக்குள் செல்ல முடியவில்லை, எனக்குப் பிராணாஹுதி கிடைக்கவில்லை, தனிச்சலுகை பெற்றவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள்” என்றனர். இப்படி செய்வதன் மூலம் நாம் மிஷனின் மாஸ்டர்கள் அனைவரையுமே அவமதிக்கிறோம். இந்த மிஷனில் தனிச்சலுகை பெற்றவர்கள் என எவரும் கிடையாது. அவர்கள் வரிசையில் நின்று, எப்படியோ மாஸ்டர் வசிக்கும் அறைக்குள்ளோ அல்லது படுக்கையறைக்கோ செல்கின்றனர். ஆனால் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், நீங்கள் மாஸ்டருடன் தோளோடு தோள் இணையலாம், ஆனால் உங்கள் இதயம் தயார் நிலையில் இருந்தாலன்றி, இதன்மூலம் உண்மைப்பொருளை நீங்கள் ஒருபோதும் அடையமாட்டீர்கள். உங்கள் இதயம் தயாராக இருந்தால், அவரிடமிருந்து நீங்கள் லட்சக்கணக்கான மைல்கள் தள்ளியிருந்தாலும் அதை அடைவீர்கள்.

எனவே, இந்த பண்டாராக்களை தியானத்தில் ஆழ்ந்து மூழ்குவதற்கும், அளவற்ற அன்புடன் மாஸ்டர்களது நினைவில் மூழ்கியிருப்பதற்கும் மற்றும் அவர்களது பிரசன்னத்தில் கரைந்து விடுவதற்குமான ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துங்கள். இதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். வாழ்வின் சின்னச் சின்ன லட்சியங்கள் நிறைவேறுவதற்காக காட்டேஜிற்குள் செல்ல முயற்சித்து பண்டாராக்களின் புனிதமான சூழ்நிலையைப் பாழக்காதீர்கள்.

உங்கள் அனைவருக்கும் நன்றி.